# யூன் – 23 – பொதுக்கால12ம் ஞாயிறு

## ஆண்டவர் இயேசுவின் திருவுடல், திரு இரத்தப் பெருவிழா

## நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள் லூக் 9:13

---

**முதல் வாசகம் : தொடக்க நூல் 14 : 18 – 20**

அப்பொழுது சாலேம் அரசர் மெல்கிசெதேக்கு அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்தார். அவர் "உன்னத கடவுளின்" அர்ச்சகராக இருந்தார். அவர் ஆபிராமை வாழ்த்தி, "விண்ணுலகையும் மண்ணுலகையும் தோற்றுவித்த உன்னத கடவுள் ஆபிராமிற்கு ஆசி வழங்குவாராக!உன் எதிரிகளை உன்னிடம் ஒப்புவித்த உன்னத கடவுள் போற்றி! போற்றி!" என்றார். அப்பொழுது ஆபிராம் எல்லாவற்றிலிருந்தும் அவருக்குப் பத்தில் ஒரு பங்கைக் கொடுத்தார்.

**பதில்பாடல் :** மெல்கிசதேத்தின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே

**இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 11 : 23 - 26**

சகோதரர் சகோதரிகளே! ஆண்டவரிடமிருந்து நான் எதைப் பெற்றுக்கொண்டேனோ அதையே உங்களிடம் ஒப்படைக்கிறேன். அதாவது, ஆண்டவராகிய இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில், அப்பத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப்பிட்டு, "இது உங்களுக்கான என் உடல். என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" என்றார்.அப்படியே உணவு அருந்தியபின் கிண்ணத்தையும் எடுத்து, "இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. நீங்கள் இதிலிருந்து பருகும் போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" என்றார்.ஆதலால் நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்.

**நற்செய்தி : லூக்கா 9 : 12–17**

பொழுது சாயத் தொடங்கவே பன்னிருவரும் அவரிடம் வந்து, "இவ்விடம் பாலைநிலம் ஆயிற்றே சுற்றிலுமுள்ள ஊர்களுக்கும் பட்டிகளுக்கும் சென்று தங்கவும் உணவு வாங்கிக்கொள்ளவும் மக்கள் கூட்டத்தை அனுப்பிவிடும்" என்றனர்.இயேசு அவர்களிடம், "நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" என்றார். அவர்கள், "எங்களிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களுமே உள்ளன. நாங்கள் போய் இத்தனை பேருக்கும் உணவு வாங்கி வந்தால்தான் முடியும்" என்றார்கள்.ஏனெனில் ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்கள் அங்கு இருந்தனர். இயேசு அவருடைய சீடர்களை நோக்கி, "இவர்களை ஐம்பது ஐம்பது பேராகப் பந்தியில் அமரச் செய்யுங்கள்" என்றார்.அவர் சொன்னபடியே அனைவரையும் அவர்கள் பந்தியில் அமரச் செய்தார்கள்.அவர் அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்து பார்த்து, அவற்றின் மீது ஆசிகூறி, பிட்டு, மக்களுக்குப் பரிமாறுவதற்காகச் சீடரிடம் கொடுத்தார்.அனைவரும் வயிறார உண்டனர். எஞ்சிய துண்டுகளைப் பன்னிரண்டு கூடைகள் நிறைய எடுத்தனர்.

**தியானம்:** இன்று யேசுவின் திரு உடல் திரு இரத்த பெருவிழா. நாம் வாழ உணவு அத்தியாவசியமான தேவையாக இருக்கின்றது. ஆனால் எது முக்கியம் என்பதை இன்றைய நற்செய்தி நமக்கு விரிவாக எடுத்துக் காட்டுகின்றது. யேசுவைத்தேடி மக்கள் வந்தார்கள். ஏன் வந்தார்கள். அவர்களுக்கு தேவை இருந்தது. யேசு சொல்வதைக் கேட்க ஆர்வம் இருந்தது. அதனால் மக்கள் அவரை தேடி வந்தார்கள். அதனை புரிந்து கொண்ட யேசு அவர்களின் தேவையை நிறைவேற்றுகின்றார். நோயாளர்களை குணமாக்குகின்றார். இது ஆன்ம உணவு. அடுத்ததாக எம் உடலுக்கு தேவையான உணவு. அதனைக் கூட யேசு கொடுக்க நினைக்கின்றார். சீடர்கள் அவரை தடுக்கின்றார்கள். தமது பணம் செலவு போய்விடும் என்ற அச்சம் அவர்களுக்கு. ஆனால் யேசு அதனைப் பற்றி கவலைப்படவில்லை. அங்கே ஒரு பகிர்தலை காட்டுகின்றார். ஒரு சிறுவனிடம் உணவு இருக்கும் போது மற்றவர்களிடம் இல்லாமல் போகமுடியாது. சிறுவன் பகிர முன் வருகின்றான். அது எல்லோரையும் பகிர ஊக்குவித்தது. முதலாவது ஆன்ம உணவு, இரண்டாவது உடலுக்கு உணவு, மூன்றாவது பகிர்வு. இவை மூன்றையும் யேசு தாம் பாடுபடும் முன்பு பெரிய வியாழன் அன்று செய்து காட்டுகின்றார். தம்மையே எமக்காக உடைக்கின்றார் யேசு. அதனால் நாம் மீட்பை கண்டடைந்தோம். அவ்வாறான பகிர்வு எம் வாழ்வில் இருக்க வேண்டும் என்று கடவுள் விரும்புகின்றார். ஆனால் இன்று எம்மத்தியில் பகிர்தல் காணாமல் போய்விட்டது. கூட்டுக் குடும்பங்கள் இன்று தனிக் குடும்பங்கள் ஆகி விட்டன. நமக்கு மட்டும் என்ற சுய நல எண்ணங்களும் நாம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணமும்தான் இன்றைய மக்கள் மத்தியில் அதிகம் காணப்படுகின்றது. உதவி செய்ய முன்வரும் தன்மை குறைந்துவிட்டது. அண்மையில் எம் தாயகத்தில் ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்கள் பலரின் மனதில் ஆறாத வடுவாகிவிட்டது. புலம் பெயர்ந்த மக்கள் சாதி, மதம், மொழி என்ற நிலைகளை கடந்து எல்லோரும் ஓர் அணியாக செயற்பட்டு தமது கவலையை அமைதிப் போராட்டமாக பல இடங்களில் வெளிப்படுத்தினார்கள், இவை வரவேற்க தக்கது. இவ்வாறுதான் எல்லாவற்றிலும் நாம் ஒற்றுமையாக செயற்பட இன்றைய வாசகங்கள் எம்மை அழைக்கின்றன. நாம் எப்போதும் கடவுளுடனும், எம்மை சூழ உள்ளவர்களுடனும் இணைந்து இருக்க வேண்டும். ஐந்தறிவு படைத்த மிருகங்கள் பறவைகளைப் பாருங்கள். அவை கூட்டமாக வருகின்றன. ஆனால் நாம் மட்டும் தனிமையாக வாழ்கின்றோம். இன்று வயதான காலத்தில் கவனிப்பாரற்று, கதைக்க யாரும் இல்லாமல், உதவ யாரும் இல்லாமல் எத்தனையோபேர் வாழ்கின்றார்கள். சிந்திப்போம்? ஒற்றுமையே பலம். கடவுளுடன் இணைந்து வாழ்வோம்.